# ஸகாத்

## வழிமுறைகள் - சட்டங்கள்

**தொகுப்பு:**
**எம். எஃப். அலீ**

**மேலாய்வு:**
**முஃப்தி அ. உமர் ஷரீஃப் காஸிமி**

ABOUT THIS BOOK

| | |
|---|---|
| Name of the Book | : **ZAKATH** |
| Compiled by | : M.F. Ali |
| Supervision | : Mufti A. Omar Sheriff Qasimi |
| Language | : Tamil |
| Edition | : 4rd Edition (May 2015) |
| No. of Copies | : 5000 |
| Total Pages | : 24 |
| Price | : **Rs. 20/-** |
| Reference Code | : DH-TML-2018 |
| Printed by | : Patel Graphics, Chennai - 06. |

Published by:

DARUL HUDA

QUALITY ISLAMIC BOOK PUBLISHERS

# 211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-600001.

Phone : +91-44-25247866,
Mobile: +91-98401 74121

darulhuda.chennai@gmail.com
www.darulhuda.net

# பொருளடக்கம்


1. ஸகாத் இஸ்லாமின் தூண் .......... 4

2. ஸகாத்தின் நோக்கம் .......... 4

3. ஸகாத் கட்டாயக் கடமை .......... 5

4. ஸகாத் கடமையாவதற்கான நிபந்தனைகள் .......... 6

5. ஸகாத் கடமையாகாதவை .......... 8

6. ஸகாத் பெறத் தகுதியுடைய எட்டு பிரிவினர் .......... 9

7. ஸகாத் பெறத் தகுதியற்றவர்கள் .......... 10

8. ஸகாத் விநியோகிக்கும் முறைகள் .......... 11

9. ஸகாத் கொடுக்காதவர்களுக்கு பயங்கர தண்டனை .......... 12

10. வருடா வருடம் ஸகாத் .......... 14

11. ஸகாத் வழிமுறைகள் சட்டதிட்டங்கள் .......... 18

12, தொகுக்க உதவிய நூல்கள் .......... 24

# 1. ஸகாத் இஸ்லாமின் தூண்

இஸ்லாம் ஐந்து (தூண்கள்) மீது நிறுவப்பட்டுள்ளது. அவை:

1. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழி அளிப்பது.
2. தொழுகையை நிலை நிறுத்துவது.
3. ஸகாத் வழங்குவது.
4. ரமழானில் நோன்பு நோற்பது.
5. ஹஜ் செய்வது ஆகியனவாகும்.

(அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரழி), நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 8)

# 2. ஸகாத்தின் நோக்கம்

மனிதன் தன் உடலால் அல்லாஹ்வை வணங்குவது போல் தான் சம்பாதித்த செல்வத்தால் அல்லாஹ்வை வணங்க வேண்டும். ஆகவே, செல்வத்தில் ஒரு பகுதியை அல்லாஹ் கூறிய மக்களுக்கு கொடுப்பது கொண்டு அந்த வணக்கத்தை நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம், கஞ்சத்தனம், குறுகிய மனம், கல்நெஞ்சம், இரக்கமின்மை, பேராசை இன்னும் இது போன்ற இழி குணங்களிலிருந்து மனிதன் பாதுகாக்கப் படுகிறான். மேலும், அன்பு, இரக்கம், ஈகை, உலக பற்றற்றத் தன்மை போன்ற நல்ல குனங்களை மனிதன் அடையப் பெறுகிறான்.

"...(நபியே!) அவர்களது செல்வத்திலிருந்து தானத்தை நீங்கள் எடுத்துக் கொண்டு அவர்(களின் உள்ளங்)களை பரிசுத்தப்படுத்துவீராக!..."

(ஸூரா அத்தவ்பா 9:103)

வறுமையினால் வாடும் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களைத் தன்னிறைவு பெற்றவர்களாக ஆக்குவது. இதன் மூலம் அவர்களது ஒழுக்க மாண்புகளைக் காப்பாற்றுவது.

"வசதியுடையவர்களுடைய செல்வத்தில், வாய்திறந்து கேட்கும் ஏழைக்கும் (சுயமரியாதை காரணமாகப்) பிறரிடம் வாய் திறந்து கேட்காமல் வாழும்

எளியவருக்கும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பங்கு உண்டு."

(சூரா அல்மஆரிஜ் 70:24,25)

நரக வேதனையை விட்டும் பாதுகாப்புப் பெறுவது.

"உங்களில் யார் பேரிச்சம் பழத்தின் ஒரு துண்டை தர்மம் செய்தேனும் நரக நெருப்பிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள இயன்றவராக இருக்கிறாரோ, அவர் அவ்வாறே செய்து கொள்ளட்டும்.

(ஸஹீஹ் முஸ்லிம் - 1845)

## 3. ஸகாத் கட்டாயக் கடமை

(நபியே!) அவர்களின் செல்வங்களில் தர்மத்தை (ஸகாத்தை) எடுப்பீராக! அதன் மூலம் அவர்களை (உள்ளும் புறமும்) தூய்மைப்படுத்துவீராக! அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! உமது பிரார்த்தனை நிச்சயமாக அவர்களுக்கு மன அமைதியை அளிக்கும். அல்லாஹ் செவியுறுபவனும் மிக அறிபவனுமாகவும் இருக்கிறான்.

(ஸூரா அத்தவ்பா 9:103)

இன்னும் நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும் ஸகாத் கொடுத்தும் வாருங்கள். ஏனென்றால், (மரணத்திற்கு) முன்னதாக உங்களுக்காக நீங்கள் என்ன நன்மையை முன்கூட்டி அனுப்பி வைப்பீர்களோ அதனையே அல்லாஹ்விடம் மறுமையில் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்குபவனாக இருக்கிறான்.

(சூரா அல்பகறா 2:110)

"உனது பொருளுக்கான ஸகாத்தை நீ வழங்கி விட்டால் உன் மீதுள்ள கடமையை நிறைவேற்றி விட்டாய்."

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸுனன் திர்மிதி - 561) மேலும் பார்க்க:-

(அல்குர்ஆன் 2:43, 83, 177, 277) - (4:77, 162) - (5:12, 55)

### ஸகாத் – நன்மைகளின் சுரங்கம்

"(மற்ற) மனிதர்களுடைய பொருள்களுடன் சேர்ந்து (உங்கள் பொருளும்) அதிகப்படுத்துவற்காக வட்டிக்கு நீங்கள் கொடுக்கும் பொருள்

அல்லாஹ்விடத்தில் அதிகப் படுவதில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப்தியை நாடி ஸகாத்தாக ஏதும் நீங்கள் கொடுத்தாலோ, கொடுத்தவர்கள் அதனை (தாங்கள் தர்மமாக கொடுத்த செல்வத்தை) இரட்டிப்பாக்கிக் கொள்கின்றனர்."
(சூரா அர்ரூம் 30:39)

"அல்லாஹ் வட்டியை அழித்து தர்மங்களை வளர்க்கிறான்..."
(சூரா அல்பகறா 2:276)

### ஸகாத் – வெற்றியின் வழி

நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றி அடைந்து விட்டனர். அவர்கள் எத்தகையோர் என்றால் மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள்; வீணான காரியங்களிலிருந்து விலகியிருப்பார்கள்; ஸகாத்தும் கொடுத்து வருவார்கள்.
(சூரா அல்முஃமினூன் 23:1-4)

### ஸகாத் – சொர்க்கத்தின் வழி

"நிச்சயமாக நான் உங்களுடனேயே இருக்கிறேன். நீங்கள் தொழுகை யை(த் தவறாது) கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து, என் தூதர்களை நம்பி, அவர்களுக்க உதவியும் புரிந்து, (கஷ்டத்திலிருப்பவர்களுக்கு) அல்லாஹ்விற்கு அழகான முறையில் கடனும் கொடுத்தால் (-ஏழைகளுக்கு அழகிய முறையில் தர்மம் கொடுத்து உதவினால்), நிச்சயமாக நான் (இவற்றை) உங்கடைய பாவங்களுக்குப் பரிகாரமாக்கி வைத்து, தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சொர்க்கச் சோலைகளில் உங்களை நுழைய வைப்பேன்" என்கிறான் அல்லாஹ்.
(சூரா அல்மாயிதா 5:12)

மேலும் பார்க்க: ஸஹீஹுல் புகாரி - 1396, 1397, 1398, 1891, 1897)

## 4. ஸகாத் கடமையாவதற்கான நிபந்தனைகள்

### 1. செல்வத்தில் முழு உரிமை இருப்பது

ஒருவர் தமக்கு முழு உரிமையும் அதிகாரமும் அற்ற செல்வத்தில்

குற்றம் பிடிக்கப்பட மாட்டார். (உதாரணம்: மனைவிக்குச் சொந்தமான நகைகள் விஷயத்தில் கணவன்)

### 2. செல்வம், “நிஸாப்” குறிப்பிட்ட அளவை எட்டியிருப்பது

‘நிஸாப்’ என்பது ஒரு பொருளில் ஸகாத் கடமையாவதற்கு மார்க்கம் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச அளவாகும்.

### 3. செல்வம் ஓராண்டு முழுமை அடைந்திருப்பது.

தனது அதிகாரத்திற்குக் கீழ் பொருள் வந்ததலிருந்து ஓராண்டு முழுமை பெறுவதாகும். இடைப்பட்ட காலத்தில் நிஸாபில் குறைவு ஏற்பட்டு ஓராண்டை நெருங்கும் வேளையில் நிஸாபை எட்டினால், இப்போது எட்டிய அளவிலிருந்து கணக்கிட வேண்டும். அது எந்த மாதத்தில் கடமையானாலும் கொடுத்திட வேண்டும்; ரமழானுக்காகத் தள்ளிப்போடக் கூடாது.

“ஒருவன் ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டால் அப்பொருளின் மீது ஒரு வருடம் சுற்றி வரும்வரை அப்பொருளுக்கான ஸகாத் அவர்மீது கடமையில்லை.”

(அறிவிப்பாளர்: அலீ (ரழி), நூல்: ஸுனன் அபூதாவூது, எண்: 1573)

### 4. கடனிலிருந்து விடுபட்டிருப்பது

நிஸாபை விடவும் அதிகமான செல்வம் இருந்து, அவசரமாக கொடுக்க வேண்டிய கடனும் இருந்தால் முதலில் கடனை நிறைவேற்ற வேண்டும். கடனை கொடுத்தப் பின் மீதமிருக்கின்ற செல்வம் நிஸாபை எட்டினால் அதில் ஸகாத் கொடுக்கவேண்டும்.

### 5. சொந்த தேவைகள் போக, மேல்மிச்சமாக இருப்பது

உணவு, குடியிருப்பு, தொழில் கருவிகள், வாகனங்கள் போன்ற அத்தியாவசிய தேவைகள் போக மீதமுள்ள செல்வம் நிஸாபை எட்டினால் ஸகாத் கடமையாகும். (பார்க்க: ஸஹீஹுல் புகாரி 1426)

# 5. ஸகாத் கடமையாகாதவை

## 1. அடிப்படைத் தேவைகள்

அத்தியாவசியத் தேவைக்காக உள்ள கட்டடம், வீடு, வாகனம், இயந்திரம் போன்றவற்றில் ஸகாத் இல்லை.

## 2. நஷ்டமாகிவிட்ட செல்வம்

மழை அல்லது புயல் போன்ற காரணங்களால் பயிர்கள் அழிந்து விட்டால் அல்லது புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற காரணங்களால் செல்வம் (தொழில்) நாசமாகி விட்டால் அவற்றில் ஸகாத் இல்லை

## 3. பொதுச் சொத்துகள்

அரசின் சொத்துகள், கனீமத் (எனும் போரில் கிடைக்கும் வெற்றிப் பொருள்) சொத்துகள், பொது நன்மைக்காக வக்ஃபு செய்யப்பட்ட சொத்துகள், பொது நிறுவனங்களின் சொத்துகள் ஆகியவற்றில் ஸகாத் இல்லை. தனிப்பட்ட ரீதியில் உரிமையாளர் இல்லாத செல்வத்திலும் ஸகாத் இல்லை. எனினும், தனி நபர்களின் பெயரில் சொத்துகள் வக்ஃபு செய்யப்பட்டிருந்தால் அதில் ஸகாத் கடமையாகும். (உதாரணமாக, குடும்ப டிரஸ்டுகளுக்கு சொந்தமான சொத்துகள், செல்வங்கள், வாடகை கட்டிடங்கள், நிலங்கள், நிறுவனங்கள், தொழிற் சாலைகள். இவற்றில் அந்த டிரஸ்டுகளின் பொறுப்புதாரர்கள் "நிசாப்" ஐ கவனித்து அதற்கேற்ப ஸகாத்து கொடுத்தாக வேண்டும்.

## 4. ஹராமான வழியில் ஈட்டப்பட்டவை

திருட்டுச் சொத்து, கொள்ளையடிக்கப்பட்ட பணம், அபகரிக்கப்பட்ட செல்வம், வட்டி மற்றும் சூதாட்டத்தில் சம்பாதிக்கப்பட்ட செல்வம், இன்னும் இவை போன்றவற்றில் ஸகாத் இல்லை. இவ்வாறான வழிகளைப் பயன்படுத்துவோர் கடும் தண்டனைக்குரியோராவார்.

"மக்களே! அல்லாஹ் தூய்மையானவன். தூய்மையானதை (- ஹலால்- அனுமதிக்கப்பட்ட முறையில் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தைத் தவிர)

வேறு எதையும் ஏற்கமாட்டான்.”

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 1015)

## 6. ஸகாத் பெறத் தகுதியுடைய எட்டு பிரிவினர்

### 1. ஏழைகள் ( அல்ஃபுகரா الفقراء )

அடிப்படை வசதி இல்லாத ஏழைகள்.

### 2. வறியவர்கள் ( அல்மஸாகீன் المساكين )

அடிப்படை வசதி இருந்தும் அன்றாட தேவைகளை சுயவருமானத்தில் நிறைவேற்றும் அளவுக்கு வசதி இல்லாதவர்கள்.

### 3. ஸகாத் துறை ஊழியர்கள் ( அல் ஆமிலீன அலைஹா العاملين عليها )

ஸகாத் வசூலிப்பு மற்றும் பகிர்ந்தளிப்பு பொறுப்புகளை நிறைவேற்றுபவர்கள்.

### 4. இதயங்கள் இணைக்கப்பட வேண்டியவர்கள் ( முஅல்லஃபது குலூப் المؤلفة قلوبهم)

இவர்கள் மூன்று வகை மக்கள்.

அ) செல்வத்தை கொண்டு உதவி செய்தால் இஸ்லாமிற்கு வந்து விடுவார்கள் என்ற நிலையில் உள்ள முஸ்லிமல்லாதவர்கள்.

ஆ) செல்வத்தைக் கொண்டு உதவி செய்தால் முஸ்லிம்களுக்கும் ஆதரவாக இருப்பார்கள் என்ற நிலையில் உள்ள பிற மதத்தைச் சேர்ந்த தலைவர்கள்.

இ) புதிதாக இஸ்லாமை ஏற்றவர்கள்.

### 5. அடிமைகளை விடுதலை செய்வதற்காக ( ஃபிர் ரிகாப் في الرقاب )

(இது அரசாங்கத்தால் வஞ்சிக்கப்பட்ட முஸ்லிம் சிறைவாசிகளின் விடுதலைக்கு பயன்படுத்துவதற்கும் பொருந்தும்.)

### 6. கடன்பட்டோர் ( அல்காரிமீன் الغارمين )

வாழ்க்கையின் அடிப்படை தேவைகளுக்காகக் கடன்பட்டவர்கள், அவ்வப் போது ஏற்படும் அழிவுகளால் தொழில் துறையில் கடன் பட்டவர்கள். (பாவமான, ஹராமான காரியங்களுக்காக கடன் பட்டோருக்கு, அவர்கள் தம் தவறை உணர்ந்து திருந்தி, பாவமன்னிப்புக் கேட்டு, இனி அப்படிச் செய்ய மாட்டோம் என உறுதி அளிக்காத வரை அவர்களுக்கு ஸகாத் வழங்கக் கூடாது.)

### 7. அல்லாஹ்வின் வழியில் ( ஃபீ ஸபீலில்லாஹ் في سبيل الله )

ஜிஹாதில் ஈடுபடுவோருக்கும் இஸ்லாமிய அழைப்புப் பணியில் முழுநேரமாக ஈடுபடுவோருக்கும் மார்க்கக் கல்விப் பணிகளில் உள்ளவர்களுக்கும் தஃவா அழைப்புப் பணிகள் சம்பந்தபட்ட திட்டங்களுக்கும் வழங்கலாம்.

### 8. பயணிகள் ( இப்னுஸ் ஸபீல் ابن السبيل)

பயணத்தின்போது செல்வத்தை இழந்து தவிப்பவர்கள்.

ஆகிய மேற்கூறப்பட்ட வகைகளில் யாருக்கு வேண்டுமானாலும் ஸகாத்தை வழங்கலாம். (அல்குர்ஆன் 9:60)

## 7. ஸகாத் பெறத் தகுதியற்றவர்கள்

### 1. வசதியுள்ளவர்கள்

வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற அளவிற்கு தன்னிறைவு பெற்றவர்களுக்கு ஸகாத் வழங்கக் கூடாது.

### 2. சீரான உடல் வலிமையுள்ளவர்கள்

எனினும், தன்னிறைவான வருமானமின்றி, வேலை வாய்ப்பிற்கு முயன்றும் அது கிடைக்கப் பெறாமல் ஏழ்மையில் இருந்தால் அவருக்கு ஸகாத் வழங்க வேண்டும்.

**3. சொந்தப் பிள்ளைகள், பெற்றோர், மனைவியர்.**

**4. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்**

**5. பொதுவான முஸ்லிமல்லாதவர்கள்**

குறிப்பு:

தொழாமலும் மார்க்கத்திற்கு எதிரான அனாச்சாரங்களைச் செய்து கொண்டும் இருக்கிற முஸ்லிம் விஷயத்தில் முதலில் அவருக்கு உபதேசிக்க வேண்டும். அவர் அதற்கு இணங்கினால் ஸகாத் கொடுக்கலாம். அல்லது அவரது குடும்பம் அவரையே நம்பி வாழும் நிலையில் இருந்தால் ஸகாத் கொடுக்கலாம்.

(பார்க்க: சூரா அல்மாயிதா 5:2)

## 8. ஸகாத் விநியோகிக்கும் வழிமுறைகள்

### 1. தனித் துறை ஒன்றை அமைத்து கூட்டாக வசூலித்து விநியோகம் செய்வது.

ஸகாத்தைத் தனிப்பட்ட முறையில் வழங்குவதைவிட ஒன்று திரட்டி தனியாக இதற்கென ஒரு துறை அமைத்து வழங்குவதையே மார்க்கம் சிறப்பித்துக் கூறுகிறது. இதன்மூலம் உருவாகிற பொது நிதி கருவூலம் (பைத்துல்மால்) நம்பகத் தன்மையும் நேர்மையும் உள்ளவர்களின் பொறுப்பில் இருக்கவேண்டும். இந்தப் பொறுப்பாளர்கள் ஸகாத் துறை ஊழியர்களாக இருந்து, ஸகாத் பெறும் தகுதியுடைய மக்களுக்கு அதைப் பகிர்ந்தளிக்க வேண்டும். யார் யார் எந்த நிலையில் தேவை உள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவரவரின் தேவைக்கேற்ப வழங்கவேண்டும். இதனால் ஸகாத்தின் நோக்கம் பூரணமாக நிறைவேறும்.

முஸ்லிம் மஹல்லாக்களில் உள்ள மஸ்ஜித் நிர்வாகிகளும், முஸ்லிம் ஜமாஅத்துகளும் இதன்படி செயல்பட்டால் - இன்றைய முஸ்லிம்கள் யாசித்துத் திரிவதையும் வங்கிகள் மற்றும் வட்டிக்கடைகாரர்களின் வலையில் விழுவதையும் ஒழிக்கலாம்.

**2. வசூலித்த பகுதியிலேயே பகிர்ந்தளிப்பது**

எந்தப் பகுதி செல்வந்தர்களிடமிருந்து ஸகாத் வசூலிக்கப்படுகிறதோ, அப்பகுதி ஏழைகளுக்கே முதலில் அதை வழங்க வேண்டும்.

முஆத் (ரழி) அவர்களை யமன் நாட்டு ஆளுநராக நபி (ஸல்) அவர்கள் அனுப்பிய வேளையில் “முஆதே! தொழுகையை அவர்கள் நிறைவேற்றினால் அவர்கள் மீது ஸகாத் கடமை என்று அறிவிப்பீராக. அது அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அவர்களில் உள்ள ஏழைகளுக்கு திரும்ப கொடுக்கப்படும்.” என கட்டளையிட்டார்கள்.

(அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரழி), நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1459)

## 9. ஸகாத் கொடுக்காதவர்களுக்கு பயங்கர தண்டனைகள்

**நரக நெருப்பில்...**

ஆகவே, (எவர்கள்) தங்கத்தையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு, அதனை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாதிருக்கின்றனரோ அவர்களுக்கு (நபியே!) நீங்கள் துன்புறுத்தும் வேதனையை நற்செய்தியாகக் கூறுங்கள்.

(தங்கம், வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும், அவர்களுடைய விலாக்களிலும் அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு,

“உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை இவைதான். ஆகவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்த இவற்றை (நீங்கள்) சுவைத்துப் பாருங்கள்” என்று கூறப்படும் நாளை (நபியே!) நீங்கள் அவர்களுக்கு ஞாபகமூட்டுங்கள். (அல்குர்ஆன் 9:34, 35)

**கழுத்து நெறிக்கப்படும்...**

எவர்கள், அல்லாஹ் தன் அருளால் தங்களுக்கு வழங்கிய பொருள்களில் கஞ்சத்தனம் செய்கிறார்களோ அவர்கள் அது தங்களுக்கு நல்லதென்று

எண்ணிட வேண்டாம். அது அவர்களுக்குத் தீங்காகவே இருக்கும். கஞ்சத்தனத்தால் சேர்த்த பொருள் மறுமையில் அவர்கள் கழுத்தில் அரிகண்டமாக (இரும்பு வளையமாக) மாட்டப்படும். வானங்கள் பூமியின் வாரிசுரிமை அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை எல்லாம் நன்கறிந்தவனாகவே இருக்கின்றான். (அல்குர்ஆன் 3:180)

## கொடிய பாம்பால் துன்புறுத்தப்படும்

"அல்லாஹ் யாருக்கேனும் செல்வத்தையளித்து அதற்கான ஸகாத்தை அவர் செலுத்தவில்லையாயின் (மறுமையில்) அவரது செல்வம் (தலை வழுக்கையான) கொடிய நஞ்சுடைய பாம்பாக அவருக்குக் காட்சி தரும். அதற்கு (அதன் நெற்றியில்) இரு கருப்புப் புள்ளிகள் இருக்கும். மறுமைநாளில் அது (அவரது கழுத்தில் மாலையாக) சுற்றிக் கொள்ளும். பிறகு அந்தப் பாம்பு அவரது முகவாய்க் கட்டையை அதாவது அவரது தாடையைப் பிடித்துக் கொண்டு "நான்தான் உனது செல்வம்; நான்தான் உனது கருவூலம்" என்று சொல்லும்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1403)

கால்நடைகளுக்குரிய ஸகாத்தைக் கொடுக்காதவர்களுக்கு அந்தக் கால்நடைகளாலேயே வேதனை செய்யப்படும். அவர்கள் பெரியதொரு மைதானத்தில் தூக்கியெறியப்படுவார்கள். பின்னர், அக்கால்நடைகள் அவர்களை முட்டும், மிதிக்கும். இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வேதனைக்கு ஆளாக்கப்படுவர்.

(பார்க்க: ஸஹீஹுல் புகாரி - 1402, ஸஹீஹ் முஸ்லிம் - 1803, 1805, 1809)

## கொடுக்க மறுப்பவர்கள் காஃபிர்களாகி விடுவர்

நபி (ஸல்) அவர்கள் மரணித்த பின்னர் அபூபக்ர் (ரழி) ஆட்சிக்கு வந்ததும் அரபிகளில் சிலர் (ஸகாத்தை மறுத்ததன் மூலம்) காஃபிர்களாகி விட்டனர்... அப்போது - "அல்லாஹ்வின் மீது ஆணையாக! தொழுகை யையும் ஸகாத்தையும் பிரித்துப் பார்ப்பவர்களுடன் நிச்சயமாக நான் போர் செய்வேன். ஸகாத், செல்வத்திற்குரிய கடமையாகும்..." என்று அபூபக்கர் (ரழி) கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1399, 1400)

## 10. வருடா வருடம் ஸகாத்

ஒரு பொருளுக்கு ஸகாத் கொடுக்கப்பட்ட பின், மீண்டும் அது நம் கைவசமே இருந்து அதன் மீது ஒரு வருடம் பூர்த்தியானால், கட்டாயம் அதற்குத் திரும்பவும் ஸகாத் கொடுக்கவேண்டும். குறைந்த பட்ச அளவை (நிஸாபை எட்டிய நிலையில் அது எத்தனை வருடம் நம்மிடம் இருந்தாலும், அதில் ஸகாத் கொடுக்கவேண்டும்.

இன்று சிலர் இதை மறுத்து ஓர் ஆய்வை வெளிட்டுள்ளனர். ஒரு பொருளுக்கு ஒரு தடவை ஸகாத் கொடுத்தால் போதும் என்பதே இவர்களின் வாதம். ஆனால் இவ்வாதத்தை இவர்கள் மார்க்கத்தின் மூல ஆதாரங்களான குர்ஆனைக் கொண்டும் ஹதீஸ்களைக் கொண்டும் நிலை நாட்டுகிறார்களா என்றால், இல்லவே இல்லை.

மாறாக வருடா வருடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்திற்கு ஆதாரங்களாக இருக்கிற ஹதீஸ்களை எப்படியாவது பலவீனப்படுத்தவே முயற்சிக்கின்றனர். இதற்காக, ஹதீஸ்களின் அறிவிப்பாளர்களை குறை கூறி, அவர்களுடைய நம்பகத் தன்மையின் மீது வீணான சந்தேகத்தைக் கிளப்புகின்றனர். பிடிவாதமாக அந்த ஆதாரங்களை மறுக்கின்றனர். அவர்களின் ஆய்வு முழுக்க இந்த முயற்சியை வெளிப்படையாகப் பார்க்கலாம். அல்லாஹ் பாதுகாக்கட்டும். இவர்கள் புதியதோர் ஹதீஸ் கலையை உருவாக்குகிறார்கள். தங்கள் கற்பனைக்கும் ஊகத்திற்கும் ஏற்ப மார்க்கத்தின் சட்டத்தை வளைக்கிறார்கள். மூலாதாரங்களை மாற்றுகிறார்கள்.

1400 ஆண்டுகளாக எந்தக் கருத்து வேறுபாடுமின்றி தொடர்ந்து வந்த ஒரு வழிபாட்டில் திடீர் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டார்கள். அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்டட்டும்.

நமது இறுதி நபி முஹம்மது (ஸல்) காலத்திலேயே இஸ்லாம் முழுமை அடைந்து விட்டது. அந்த முழுமை வெறும் குர்ஆன் ஹதீஸ் என்ற எழுத்து வடிவத்தில் மட்டுமல்ல: செயல் வடிவத்திலும் கூட! வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) தமது தோழர்களுக்குக் காட்டிக் கொடுத்தார்கள். கண்ணியமிக்க அத்தோழர்கள் அதை அப்படியே நடைமுறைப்படுத்தினார்கள். மனிதர்கள் எனும்

அடிப்படையில் அவர்களில் சிலரின் மார்க்க விளக்கத்தில் தனிப்பட்ட குறைகள் நிகழ்ந்து இருந்தாலும், ஒட்டு மொத்த ஜமாஅத்தின் அடிப் படையில் அவர்கள்தான் நேர்வழி பெற்றவர்கள், சிறந்த தலைமுறையினர், பரிசுத்தப்படுத்தப்பட்டவர்கள், பின்பற்ற தகுதியானவர்கள்.

(பார்க்க அல்குர்ஆன் 1:6,7 - 2:137 - 4:69 - 9:100, 117 - 33:23 - 48:10, 26, 29 - 58:22)

மார்க்கத்தின் எந்த விஷயத்தில் அந்த நபித்தோழர்களுடைய ஜமாஅத், ஏகோபித்தக் கருத்தில் இருக்கிறதோ அதுவே மார்க்கமாகும். ஏனெனில் 73 கூட்டங்களில் சொர்க்கம் செல்லும் ஒரு கூட்டம் என்று நபி (ஸல்) கூறியது நபித்தோழர்களைப் பின்பற்றிய கூட்டத்தையே! இவர்கள்தான் இஸ்லாம் முழுமை அடைந்துவிட்டதற்கான செயல்வடிவ ஆதாரம்.

**அல்லாஹ் எச்சரிக்கிறான்:**

"எவர் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும் (அல்லாஹ்வுடைய) இத்தூதரை விட்டுப் பிரிந்து நம்பிக்கையாளர்களின் வழி அல்லாததில் செல்கின்றாரோ அவரை நாம் அவர் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு (பின்னர்) அவரை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது செல்லும் இடங்களில் மிகக் கெட்டது.

(அல்குர்ஆன் 4:115)

இந்த வசனத்தில் "நம்பிக்கையாளர்களின் வழி" என்று யாரின் வழியை அல்லாஹ் குறிப்பிடுகிறான்? யார் மத்தியில் இவ்வசனம் இறக்கப்பட்டது? அப்போதிருந்த நம்பிக்கையாளர்கள் யார்?

சந்தேகமே இல்லை. நபித்தோழர்களின் வழி அல்லாத வேறு ஒரு வழியில் புதியதொரு மார்க்க விளக்கத்தை நாம் பெற்றால், அது நிச்சயம் நம்மை நரகத்திற்கே கொண்டு தள்ளும்.

வருடா வருடம் ஸகாத் கொடுக்க வேண்டும் என்பதற்கு நபித்தோழர்களின் கூற்றில் இருக்கும் ஆதாரங்களை இங்கு நாம் குறிப்பிட அவசியமில்லை. ஏனெனில் அந்த ஆதாரங்கள் நம்பகமானவையே என்பதை இவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். எனினும் நபித்தோழர்களுக்கு வஹ்யி வராது எனக் கூறி மறுத்துள்ளனர். நகைப்பிற்குரிய இந்தக் கூற்று இவர்கள் தங்களுக்குத்தான் வஹ்யி வருகிறது எனக் கூறுவது போல் உள்ளது.

உண்மையில், இவர்களைவிட ஸஹாபாக்கள் நம்பகத்தன்மை மிக்கவர்கள். காரணம், வஹ்யி இறங்கிக் கொண்டிருந்தது அவர்கள் மத்தியில்தான்; இவர்கள் மத்தியில் இல்லை.

ஆகவே, ஸஹாபாக்கள் வாழும் காலத்திலேயே முழுமை அடைந்து விட்ட இஸ்லாமை புதிய கோணத்தில் - புதிய விளக்கத்தில் - புதிய வழிகேட்டுடன் அறிமுகம் செய்கிற இவர்களது கருத்தை நிராகரிக்க வேண்டும். தவறினால், அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளாக வேண்டியதாகிவிடும்.

அனைத்திற்கும் மேலாக, இவர்கள் தங்கள் ஆய்வில் தொடாத ஓர் ஆதாரத்தைக் குறிப்பிட்டும். நமது சத்தியக் கருத்தை மீண்டும் இங்கு நிலை நாட்டுகிறோம்.

“நபி (ஸல்) அவர்களிடம் ஒரு பெண்மணி வந்தார். அவருடன் அவருடயை மகளும் இருந்தாள். அவளுடைய கையில் இரண்டு தங்க வளையல்கள் இருந்தன. நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியிடம் “நீ இதற்கு ஸகாத் தருகிறாயா?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், “இல்லை” என்றார். மறுமையில் அல்லாஹ் இதற்குப் பதிலாக நெருப்பினால் ஆன இரண்டு வளையல்கள் அணிவிப்பதை விரும்புகிறாயா? என்று கேட்டார்கள். (இதைக் கேட்டவுடன்) அவர் அவற்றை கழற்றிக் கொடுத்து விட்டார் என்று அம்ர் இப்னு ஷுஐபு தனது தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார்கள். (நூல்கள்: ஸுனன் அபூதாவூது, ஸுனன் நஸாயீ, ஸுனனுத் திர்மிதி - அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் அறிவிப்பின் மூலம் ஹாகிம் (ரஹ்) இதை ஸஹீஹ் என்றார்கள்)

இந்த ஹதீஸில் அப்பெண்மணியிடம் ‘நீ இதற்கு ஸகாத் தருகிறாயா?’ என நபி (ஸல்) அவர்கள் கேட்ட கேள்வி ஒரு நுட்பமான அர்த்தமுடையதாகும். மூலத்தில் ‘அதுஃத்தீன ஸகாத்த ஹாதா?’ أتؤدين زكاة هذا என உள்ளது. இதைத் தமிழாக்கிய சிலர், ‘நீ இதற்கு ஸகாத் கொடுத்து விட்டாயா? என இறந்தகால வினையில் செய்து விட்டனர். ஆனால், இறந்த கால வினைக்கு அரபியில் ‘அ அத்தய்த்த’ என்ற பதம் இருக்கிறது. அதை நபி (ஸல்) பயன்படுத்தவில்லை.

“தருகிறாயா? கொடுத்து வருகிறாயா?’ என இறந்த காலத்தையும்

நிகழ்காலத்தையும் உள்ளடக்கி கேட்கும் தொனியிலேயே ஸகாத்தைக் கேட்டார்கள். ஒவ்வொரு வருடமும் அப்பொருளுக்கான ஸகாத்தைக் கொடுத்தாக வேண்டும் என்ற தொடர்ச்சியான செயலையே இங்கு நாம் விளங்க முடிகிறது. எனவே, வருடா வருடம் ஸகாத் கொடுப்பது கட்டாயக் கடமையாகும் என்பது சந்தேகமின்றி நிரூபணமாகிறது; மேலும், கொடுக்காதவர்களுக்கு அந்தப் பொருளாலேயே நரக தண்டனை உண்டு என்பதும் நிச்சயமாகிறது.

----------------------

# ஸகாத் - வழிமுறைகள் சட்டதிட்டங்கள்

| பொருள் வகைகள் | நிஸாப் (குறைந்த பட்ச உச்சவரம்பு) | ஸகாத் அளவு | காலஅளவு |
|---|---|---|---|
| தங்கம் | 20 மிஸ்காலை எட்டி விட்டால் கடமை. 1 மிஸ்கால் = 4.374 கிராம் 20 x 4.374 = 87.48 கிராம், 87.48 = 11 சவரன் | 2.5% (40ல் 1 பங்கு) அதாவது, 11 சவரனுக்கு 2.187 கிராம் (அ) 1/4 சவரன் தங்கம் | ஆண்டு தோறும் |
| வெள்ளி | 5 ஊக்கியாவை எட்டி விட்டால் கடமை, 1 ஊக்கியா = 122.472 கிராம். 5 x 122.472 = 612.36 கிராம் | 2.5% (40ல் 1 பங்கு) சுமார் 615 கிராமுக்கு 15 கிராம் வெள்ளி | ஆண்டு தோறும் |

**குறிப்பு:** நாணயங்களாகவோ, கட்டிகளாகவோ, பாத்திரங்களாகவோ எப்படி இருப்பினும் இவை நிர்ணயிக்கப்பட்ட நிஸாப் அளவிற்கோ அதைவிட அதிகமாகவோ இருக்கும் பட்சத்தில் ஸகாத் கடமையாகிவிடும். அப்போது இவை அணியப்பட்டிருந்தாலும் சரி, இரவல் கொடுக்கப்பட்டிருந்தாலும் சரியே!

**ஆதாரக் குறிப்புகள்:** தங்கத்தையும் வெள்ளியையும் அல்லாஹ்வின் பாதையில் செலவிடாதோருக்கு நரகில் துன்புறுத்தும் வேதனை (சூரா அத்தவ்பா 9:34, 35) நபி (ஸல்) அவர்கள் இருபது மிஸ்கால் தங்கத்திற்கு அர மிஸ்கால் தங்கம் ஸகாத்தாக எடுப்பார்கள். (ஸுனன் இப்னு மாஜா) ஐந்து ஊக்கியாவுக்கு குறைந்த அளவு (வெள்ளியில்) ஸகாத் இல்லை. ஸஹீஹுல் புகாரி 1405, ஸஹீஹ் முஸ்லிம் 1780) பெண்களே! உங்கள் நகைகளிலிருந்தாவது நீங்கள் ஸகாத்தை செலுத்துங்கள் ஏனெனில், மறுமை நாளில் நரகவாசிகளில் நீங்களே அதிகமாக இருக்கிறீர்கள். (ஸுனனுத் திர்மிதி 575)

| பொருள் வகைகள் | நிஸாப் (குறைந்த பட்ச உச்சவரம்பு) | ஸகாத் அளவு | காலஅளவு |
|---|---|---|---|
| ரொக்கப் பணம் | தங்கத்தின் நிஸாப் (11 சவரனுக்கு நிகரான பணம்) | 2.5% | ஆண்டுதோறும் |

**குறிப்பு:** ● 11 சவரன் தங்கத்தினுடைய சந்தை விலைக்கு நிகராகவோ அதைவிட அதிகமாகவோ இருந்தால் ஸகாத் கடமை. அத்தொகை வங்கியின் சேமிப்புக் கணக்கிலோ (SB A/c) நடப்புக் கணக்கிலோ (Current A/c) நிறுவனங்களின் பங்குப் பத்திரங்களிலோ (Company Shares) இருந்தாலும் கடமையாகும். ● பணியாளர்களில் சம்பளத்தில் பிடித்தம் செய்கிற எதிர்கால வைப்பு நிதிக்கு (Provident Funt) அதைப் பயன்படுத்தும் பூரண அதிகாரம் கிடைக்கிற போது ஸகாத் தரவேண்டும். ● கடனாகத் தரப்பட்ட தொகைக்கும் ஸகாத் உண்டா என்பது, கடன்பட்டவரின் நிலை அறிந்தே முடிவாகும். கடனாளி வசதியற்றவராகவோ ஏமாற்றி வருபவராகவோ இருப்பின் அவரிடமிருந்து அக்கடன் திரும்பப் பெறும்வரை, கொடுத்தவருக்கு அத்தொகையில் ஸகாத் இல்லை. ஆனால், கடனாளி வசதியானவராயின் அவரிடம் தரப்பட்ட கடனுக்கும் சேர்த்து ஸகாத் கடமையாகும். காரணம் இருவரும் வசதியானோர் என்ற ரீதியில், கொடுத்தவரின் சேமிப்பு நிதியாகவே அத்தொகை கருதப்படும்.

**ஆதாரக் குறிப்புகள்:** நபி (ஸல்) அவர்களது காலத்தில் பண மாற்று முறை இல்லை. ஆயினும், தீனாரும் (தங்கக் காசு), திர்ஹமும் (வெள்ளிக் காசு) இருந்தன. இவை அண்டை நாடுகளுடனான கொடுக்கல் வாங்கலுக்குச் சிறந்ததொரு பரிமாற்ற வழியாக இருந்தன. இங்கு நாம் தங்கத்தின் நிஸாபை ரொக்கப் பணத்திற்கு அளவு கோலாக கொண்டதின் காரணம், அதை அடிப்படையாக வைத்தே உலக நாடுகளின் பொருளாதார நிலை கணிக்கப்படுகிறது என்பதே ஆகும். செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மட்டுமே சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது. (சூரா அல்ஹஷ்ர் 59:7)

| பொருள் வகைகள் | நிஸாப் (குறைந்த பட்ச உச்சவரம்பு) | ஸகாத் அளவு | காலஅளவு |
|---|---|---|---|
| வியாபாரச் சரக்குகள் (நகைகள், ஜவுளிகள், தானிய வகைகள், கடல் பொருட்கள், மளிகை, ஃபர்னிச்சர்கள், ஸ்டேஷனரி, வாகனங்கள், இயந்திரங்கள், கட்டடச் சாமான்கள், தொழில் தளவாடங்கள், கனரக வாகனங்கள், பஸ்கள், கப்பல்கள், விமானங்கள் போன்றை அசையும் பொருட்கள் நிலம், கட்டடம், ஆலை, தொழிற்சாலை போன்ற அசையாப் பொருட்கள் இவற்றில் எவை எவை வியாபாரத்திற்கென வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவை அனைத்தும்) | ரொக்கப் பணத்தின் நிஸாப் | அசலையும் இலாபத்தையும் சேர்த்து கணக்கிட்டு அதிலிருந்து 2.5% | ஆண்டுதோறும் |

**குறிப்பு:** சரக்குகளின் சந்தை மதிப்பை (Market Rate) கணக்கிட்டு அவ்விலையிலிருந்து ஸகாத் தரவேண்டும். அதை ரொக்கமாகவோ வியாபாரச் சரக்குகளாகவோ எப்படியும் தரலாம். ● கடன்கள் இருப்பின் வரவேண்டிய கடன்களை எல்லாம் வரவு வைத்து, கொடுக்க வேண்டிய கடன்களை அக்கணக்கில் தனியாக ஒதுக்கிவிட்டு மீதமுள்ளவை நிஸாபை எட்டும் பட்சத்தில் ஸகாத் கடமையாகும்.

**ஆதாரக் குறிப்புகள்:** நம்பிக்கையாளர்களே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும் நாம் உங்களுக்குப் பூமியிலிருந்து வெளியாக்கிய வற்றிலிருந்தும் நல்லவற்றையே (தர்மமாகச்) செலவு செய்யுங்கள். அவற்றில் கெட்டவற்றை கொடுக்க விரும்பாதீர்கள். (ஏனென்றால், கெட்டுப்போன பொருள்களை உங்களுக்கு ஒருவர் கொடுத்தால்) அவற்றை நீங்கள் (வெறுப்புடன்) கண் மூடியவர்களாகவே தவிர வாங்கிக்கொள்ள மாட்டீர்களே! (ஆகவே, நீங்கள் விரும்பாத பொருள்களை பிறருக்கு தர்மமாகக் கொடுக்காதீர்கள்.) நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவன், மிக்க புகழுடையவன் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். (ஸூரா அல்பகறா 2:267) இமாம் புகாரி (ரஹ்), தொழில் வியாபாரம் ஆகியவற்றின் தர்மம் என்ற தலைப்பிட்டு இந்த வசனத்தை மேற்கோள் காட்டியுள்ளார்கள்.

| பொருள் வகைகள் | நிஸாப் (குறைந்த பட்ச உச்சவரம்பு) | ஸகாத் அளவு | காலஅளவு |
|---|---|---|---|
| வீடுகள் | ரொக்கப் பணத்தின் நிஸாப் | 2.5% | ஆண்டு தோறும் |
| **குறிப்பு:** • குடியிருக்கும் வீட்டிற்கு ஸகாத் இல்லை. வாடகைக்கு விடப்பட்டவை விஷயத்தில் அவற்றின் வருமானத்தில் மட்டுமே ஸகாத் உண்டு. | | | |
| **ஆதாரக் குறிப்புகள்:** மார்க்கத்தில் இவை விவசாய நிலத்தைப் போலவே கணிக்கப்படுகின்றன. (நூல்: முக்தஸர் அல்ஃபிக்ஹ் அல்இஸ்லாமி) | | | |
| புதையல், மற்றும் பூமிக்கடியில் இருந்து கிடைக்கிற கச்சா எண்ணெய் போன்ற தாதுப் பொருட்கள் | நிஸாப் நிர்ணயிக்கப்பட வில்லை, எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வள விற்கும் உரிய ஸகாத் வழங்கிவிட வேண்டும். | 20% | உடனுக்குடன் |
| **குறிப்பு:** தங்கச் சுரங்கம் மற்றும் தாது பொருட்களின் சுரங்கம் ஆகியவை புதையலில் சேராது. | | | |
| **ஆதாரக் குறிப்புகள்:**<br>• புதையலில் ஐந்தில் ஒரு பங்கு (ஸகாத்தாக) வசூலிக்கப்படும். (ஸஹீஹுல் புகாரி 1499)<br>• தேனுக்கு ஸகாத் இல்லை. (ஸுனனுத் திர்மிதி 571) | | | |

| பொருள் வகைகள் | நிஸாப் (குறைந்த பட்ச உச்சவரம்பு) | ஸகாத் அளவு | காலஅளவு |
|---|---|---|---|
| விவசாய உற்பத்திகள் (கோதுமை, நெல், சவ்வரிசி, பேரிச்சம் பழம், உலர்ந்த திராட்சை, சோளம், கரும்பு, தென்னை போன்ற உணவுப் பொருள்கள் பஞ்சு, சணல், இரப்பர் போன்ற மனிதத் தேவைகள் அனைத்தும்) | 5 வஸக்'கை எட்டி விட்டால் கடமை. 1 வஸக் = 60 ஸாஉ, 1 ஸாஉ = 2.040 கிலோ கிராம். 5 வஸக் 5 x 60 = 300 ஸாஉ. 300 x 2.040 = 612 கிலோ | நிஸாபை எட்டிய விலைபொருள் மழை நீரிலோ, ஊற்று நீரிலோ, ஆற்றங்கரைகளிலோ நீர்ப்பாசனம் செய்யாமல் இயற்கையாக விளைந்தால் 10% ஸகாத் கடமையாகும். நீர் இறைத்து உரம் போட்டு உழுது, களை எடுத்து, நாற்று நட்டு, காவல் காத்து பராமரித்து விளைந்தால் 5% கடமையாகும். இரு விதத்திலும் விளைந்து கலந்திருந்தால் 7.5% கடமையாகும். | அறுவடை செய்த உடனே |

**குறிப்பு:** அழுகிற பழங்கள், காய்கறிகள், தண்ணீர்க்காய், ஆப்பிள் போன்றவற்றில் கடமை இல்லை. ஆனால், இவை விற்ற பணம் வருட இறுதியில் நிஸாபை எட்டினால் அதற்கு ஸகாத் கடமை. • விளைச்சல் பொருட்களுக்கு ஸகாத்தை அவற்றிலிருந்தே கொடுக்க வேண்டும். அதற்குரிய விலையை கணக்கிட்டு கிரயமாக கொடுக்கலாகாது.

**ஆதாரக் குறிப்புகள்:** (பந்தலில்) படர்ந்த கொடிகளும், படராத செடிகளும், (பலா) பேரிச்ச மரங்களும் உள்ள சோலைகளையும், புசிக்கக்கூடிய விதவிதமான (பயிர், பச்சைகளையும்) தானியங்களையும், (பார்வைக்கு) ஒன்றுபோலும் வெவ்வேறாகவும் தோன்றக்கூடிய ஒலிவம், மாதுளை (மற்றும் பலவகை கனி வர்க்கங்கள்) ஆகியவற்றையும் அவனே படைத்திருக்கின்றான். ஆகவே, அவை பலனளித்தால் அவற்றை (தாராளமாய்) புசியுங்கள், அவற்றை அறுவடை செய்யும்போது (இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக) அதில் அவனுடைய பாகத்தையும் கொடுத்து விடுங்கள். அளவு கடந்து (வீண்) செலவு செய்யாதீர்கள். ஏனென்றால், அளவு கடந்து (வீண்) செலவு செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (சூரா அல்அன்ஆம் 6:141, மேலும் பார்க்க: ஸஹீஹுல் புகாரி 1405, 1459, 1483, 1485 ஸஹீஹ் முஸ்லிம் 1780, 1785, 1786 ஸுனனுத் திர்மிதி 568, 577, 578, 579)

| பொருள் வகைகள் | நிஸாப் (குறைந்த பட்ச உச்சவரம்பு) | ஸகாத் அளவு | காலஅளவு |
|---|---|---|---|
| மாடு (பசு, எருமை) | 1 முதல் 29 வரை | ஸகாத் கடமையில்லை | ஆண்டுதோறும் |
| | 30 முதல் 39 வரை | ஒரு வயது மாடு ஒன்று | |
| | 40க்கு | 2 வயது மாடு ஒன்று | |
| | இந்த எண்ணிக்கைக்கும் அதிகமானால், ஒவ்வொரு 40க்கும் 2 வயது மாடு ஒன்று | | |
| ஆடு (செம்மறி ஆடு, வெள்ளாடு) | 1 முதல் 39 வரை | ஸகாத் கடமையில்லை | ஆண்டுதோறும் |
| | 40 முதல் 120 வரை | ஒரு வயது ஆடு ஒன்று | |
| | 121 முதல் 200 வரை | ஒரு வயது ஆடு இரண்டு | |
| | 201 முதல் 300 வரை | ஒரு வயது ஆடு மூன்று | |
| | இதற்கு மேல் ஒவ்வொரு 100க்கும் ஓர் ஆடு | | |

**குறிப்பு:** • வழங்கப்படும் கால்நடைகள் குறையற்றதும் நோய்நொடிகள் அற்றதுமாக இருக்க வேண்டும். பல் உடைந்த, வயது முதிர்ந்த, நொண்டி, குருடாக, அறுபட்டதாக இருக்கக்கூடாது, உறுப்புகள் சேதமடைந்திருக்கக் கூடாது. • ஒட்டகத்திற்கும் ஸகாத் உண்டு என்றாலும், நம் பகுதி மக்களிடம் அவை இல்லை என்பதால், அதன் அளவுகளை இங்குக் குறிப்பிடவில்லை. எனினும், அது குறித்த சட்டதிட்டங்களை ஸஹீஹுல் புகாரி 1399, 1400, 1405, 1447, 1452, 1453, 1459, 1484, 1501, 1502. ஸஹீஹ் முஸ்லிம் 1780, 1782, 1784. ஸுனனுத் திர்மிதி 564 ஆகிய ஹதீஸ்களில் காணலாம்.

**ஆதாரக் குறிப்புகள்:** ஸஹீஹுல் புகாரி 1452, 1399, 1400, 1405, 1454, 1453, 1501, 1502, 1460, 1455. ஸஹீஹ் முஸ்லிம் 1780, 1805. ஸுனனுத் திர்மிதி 564, 565, 566.

## தொகுக்க உதவிய நூல்கள்

1. வறுமை ஒழிப்பில் ஸகாத்தின் பங்கு
2. நபிவழியில் நம் ஸகாத்
3. What you must be known about Islam